A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 52 / 2024**

திரு K. நாகராஜ்,
த/பெ. S. குப்புசாமி,
பஸ் ஸ்டாப் கிழபுறம், 5/129 B, அண்ணா நகர்,
தோட்டத்து சாளை, பூளவாடி – 642 206,
உடுமலை வட்டம், திருப்பூர் மாவட்டம்.

………மேல்முறையீட்டாளர்
(திரு K. நாகராஜ்)

எதிர்

1. செயற்பொறியாளர்/ இ&ப/ உடுமலை,
உடுமலை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
திருப்பூர் ரோடு, எரிப்பாளையம் அஞ்சல்,
உடுமலை – 642 126.

2. உதவி மின்பொறியாளர்/ இ&ப/ பூளவாடி,
உடுமலை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
அத்துகிணத்துப்பட்டி ரோடு, பூளவாடி,
மாடத்துக்குளம் தாலுக்கா – 642 206.

. . . எதிர்மனுதாரர்கள்
(திரு D.மூர்த்தி, செயற்பொறியாளர்/ இ&ப/ உடுமலை
திரு A. பரமேஷ்வரன், உதவி மின்பொறியாளர்/ இ&ப/ பூளவாடி)

**மனு பெறப்பட்ட நாள்: 11-07-2024**

**கேட்புரை நாள் : 12-09-2024**

**ஆணை நாள்: 23-09-2024**

11.07.2024 அன்று பெறப்பட்ட திரு K. நாகராஜ், த/பெ. S. குப்புசாமி, பஸ் ஸ்டாப் கிழபுறம், 5/129 B, அண்ணா நகர், தோட்டத்து சாளை, பூளவாடி – 642 206 உடுமலை வட்டம், திருப்பூர் மாவட்டம் அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 52/2024 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை

12.09.2024 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

தனது தந்தை பெயரில் உள்ள இலவச மின் இணைப்பு விண்ணப்பத்தை தனது பெயரில் மாற்றம் செய்து மின் இணைப்பு வழங்குமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

### 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 தனது தந்தை பெயரில் உள்ள விவசாய நிலமான க.ச.எண் 27/1–இல் அமைந்துள்ள ஆழ்குழாய் கிணற்றிற்கு விவசாய மின்இணைப்பு வேண்டியும், தனது பெயருக்கு பெயர் மாற்றம் வேண்டியும் மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேற்கூறிய விண்ணப்பத்திற்கு சாதாரண வரிசையில் தயார்நிலை பதிவு செய்ய அறிவிப்புக் கடிதம் வழங்கப்பட்டதாகவும், ஆனால் இதுநாள் வரை தற்போதைய வருவாய் துறையினரின் ஆவணங்கள் அளிக்கப்படாததாலும் விண்ணப்பம் பெயர் மாற்றம் செய்யப்படாமலும் தயார் நிலை பதிவு செய்யப்படாமலும் உள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எதிர்மனுதாரரின் பதில் திருப்தி அளிக்காத காரணத்தால் மேல்முறையீட்டாளர் உடுமலை மின் பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 15.04.2024 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், உடுமலை மின் பகிர்மான வட்டம் 20.05.2024 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

**3.0 <u>மன்றத்தின் தீர்வு :</u>**

3.1 உடுமலை மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 20.05.2024 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*

*மனுதாரர் தந்தை பெயரில் பூளவாடி கிராமம் க.ச.எண். 27/1 பூமியில் உள்ள ஆழ்குழாய் கிணற்றுக்கு பதிவு செய்யப்பட்ட விவசாய விண்ணப்பத்திற்கு அறிவிப்பு கடிதம் 04.01.2022 அன்று விடுவிக்கப்பட்டு 18.01.2022 அன்று மனுதாரரால் பெறப்பட்டுள்ளது.*

*மனுதாரரின் தந்தை காலமாகிவிட்ட நிலையில் மனுதாரரோ, மற்ற வாரிசுதாரர்களோ மேற்படி பூமிக்கு உண்டான உரிய வருவாய் ஆவணங்கள் இதுநாள் வரை சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் பூளவாடி கிராமம் க.ச.எண்.27/1 பூமியில் உள்ள ஆழ்குழாய் கிணற்றுக்கு விவசாய மின் இணைப்பு வேண்டி மனுதாரரால் எவ்வித விண்ணப்பமும் பதிவு செய்யப்படவில்லை. வட்டாச்சியரிடமிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்றின் பேரில் மனுதாரருக்கு மேற்படி பூமிக்கு உரிமை உள்ளதற்கான வருவாய் ஆவணங்கள் ஏதும் இல்லாத நிலையில், வருவாய் துறையிடமிருந்து வாரிசு மற்றும் உரிமைக்கான உரிய வருவாய் ஆவணங்களை வாரிய விதிமுறைகளுக்கு உட்பட்ட காலகெடுவிற்குள் அளிக்கும்பட்சத்தில் விவசாய விண்ணப்பம் பெயர் மாற்றம் செய்யப்பட்டு, மின் இணைப்பு வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும், தற்போது அளிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரர் பெயரில் மாற்றம் செய்து, விவசாய மின் இணைப்பு வழங்க சாத்தியமில்லை என தீர்மானித்து தீர்ப்புரை வழங்கப்படுகிறது."*

**4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:**

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதார்களும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 12.09.2024 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு K. நாகராஜ் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதங்களை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு D.மூர்த்தி, செயற்பொறியாளர்/ இ&ப/ உடுமலை மற்றும் திரு A. பரமேஷ்வரன், உதவி மின்பொறியாளர்/ இ&ப/ பூளவாடி, உடுமலை மின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளர் மேற்கூறிய விலாசத்தில் குடியிருந்து கடந்த 20 வருடங்களாக தங்களது பூமியில் விவசாயம் செய்தும், சுவாதீனத்திலும் இருந்து வருவதாகவும், மேலும் அவர்தான் முதல் மகனும், முதல் பங்குதாரரும் ஆவார் என்றும், இந்த பூமியில் கடந்த 2009-இல் 2 ஆழ்குழாய் கிணறுகள் இட்டு இலவச மின் இணைப்பு வேண்டி விண்ணப்ப படிவ எண்.31997-ல் பதிவு எண்.EEL/220/2009-10 நாள்: 13.07.2009 ரூ.500/- பதிவுக்கட்டணம் செலுத்தி (S.No.189276) பதியப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

5.2 மேலும் இதில் பதியப்பட்ட மின் இணைப்பு 09.10.2021 அன்று வரிசை எண் அடிப்படையில் வந்ததாக TNEB பூளவாடி அலுவலகத்தில் இருந்து கடிதம் பெறப்பட்டதாகவும், மேலும் அதில் குறிப்பிட்டப்படி அனைத்து ஆவணங்களும் கொடுக்கப்பட்டதாகவும், மேலும் அதில் தனது தந்தை 31.05.2014 அன்று இறந்து விட்டார் என்றும் எனவே அவருடைய இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் முழுவதும் கொடுக்கப்பட்டதாகவும், கொடுக்கப்பட்ட ஆவணங்களை வைத்து அதிகாரிகள் விசாரணை செய்து குப்புசாமியின் மற்ற வாரிசுகள் தடையின்மை சான்றுகள் கையொப்பம் கேட்டதாகவும், இது பற்றி மற்ற வாரிசுகளிடம் பேசிய போது கையொப்பம் இட மறுத்துவிட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 இந்த இயலாத சூழ்நிலையை EB அதிகாரிகளிடம் எடுத்துரைத்ததாகவும் அதற்கு அவர்கள் மற்ற வாரிசுகளின் கையொப்பம் இருந்தால் மட்டுமே மின் இணைப்பு

கொடுக்கப்படும் என்று திட்டவட்டமாக கூறிவிட்டதாகவும், மற்ற எல்லா ஆவணங்களும் உடுமலை EE மற்றும் SE போன்ற உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டதாகவும், இதனை அடுத்து அவர்கள் பதில் கடிதமும் கொடுத்ததாகவும், அதில் இந்த பதில் திருப்தியின்மை எனில் மின் குறைதீர்க்கும் மன்றம், உடுமலை என்ற அலுவலகத்தில் மேல் முறையீடு செய்யலாம் என அறிவுறுத்தப்பட்டதாகவும், எனவே அவர் மேல் முறையீடு செய்து கடந்த 20.05.2024 நேரடியாக மன்றத்தின் தலைவர் மற்றும் அதிகாரிகள் முன்னிலையில் அதற்குண்டான காரணங்களை தெரிவித்ததாகவும், மேற்படி தெரிவித்ததில் அவர்கள் கொடுத்த பதில் காரணங்களும் தங்கள் பார்வைக்கு இணைக்கப்பட்டுள்ளதாகவும், அது விபரமாக கீழே குறிப்பிட்ட காரணங்கள் அவர்கள் கொடுத்த உத்தரவிற்கு பதிலாகவும், தங்கள் பார்வைக்கு கொண்டுவரப்படுவதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 மேற்கூறிய சொத்திற்கு முதல் பங்குதாரரும், குத்தகைதாரரும் ஆவதாகவும், குத்தகை ஆவணம் TR 2/2013 1A–1/2015 உடுமலை வட்டாட்சியர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட உத்தரவு ஆவணம் எனவும், தனது தந்தை சொத்தை பொறுத்தவரை சில முறைகேடுகள் நடந்திருப்பதால் கோவை சார்பு நீதிமன்றத்தில் OS/1246/2013 என்ற வழக்கு தொடர்ந்துள்ளதாகவும், மற்ற வாரிசுகள் நீதிமன்றத்தில் வழக்குகள் இருப்பதாலும், சொத்தை முறைகேடாக பெறும் நோக்கத்துடனும் கையொப்பம் இட மறுக்கின்றதாகவும், இதனை அவர் குறைதீர்க்கும் மன்றத்தில் தெளிவாக வாய் மொழியாகவும், ஆதாரங்களோடும் எடுத்து உரைத்துள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 பங்குதாரர் மற்றும் குத்தகைதாரர் என்ற முறையிலும் உடுமலை வட்டாட்சியர் அவர்களிடம் ஆழ் குழாய் கிணற்றுக்கு மற்ற வாரிசுகளின் தடையின்மை கையெழுத்து இடாத பட்சத்தில் அவர்களிடம் தடையின்மை சான்றிதழ் கோரியதாகவும், அவர்களும் விசாரித்து தடையின்மை சான்றிதழ் அளித்தனர் என்றும் அதனை குறைதீர்க்கும் மன்றத்தில் எடுத்துரைத்ததாகவும், அதற்கு அவர்கள் வட்டாட்சியரிடம் அவர்கள் பெயரில் சொத்து அல்லது வருவாய் ஆவணங்கள் மாற்றி வாங்கி வாருங்கள் என கோரியதாகவும், மேலும் அவர்கள் கேட்கும் ஆவணம் சொத்து உரிமை என்பது சொத்து விற்பனை செய்யப்பட்டாலோ அல்லது சார்பதிவாளர் அலுவலகத்தில் முறையாக பதியப்பட்டாலோ

மட்டும் உரிமை ஆவணம் அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டதாகவும், எனவே வருவாய்துறை ஆவணம் சம்பந்தமாக அடங்கலில் குத்தகை பதிவு எண் பதியப்பட்டுள்ளதாகவும், மேலும் பூளவாடி கிராம நிர்வாக பதிவேட்டிலும் பதியப்பட்டுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 மேலும் குறைதீர்க்கும் மன்றம் அளித்த உத்தரவில் பக்க எண் 3–இல் VAO–விடம் Ownership Certificate கேட்டும் பட்டாவில் பெயர் சேர்க்க வேண்டும் என்றும் உத்தரவின்படி கேட்டதாகவும், தான் அவர்களிடம் முன்பே கூறியபடி Ownership Certificate பட்டாவில் பெயர் சேர்த்தல் முறையான சட்டப்பூர்வமான முறையில் விற்பனை செய்தால் மட்டுமே பட்டாவில் உரிமை சான்றிதழ் அளிக்கப்படும் என வட்டாட்சியர் அலுவலகத்தில் தெரிவிக்கப்பட்டது என்றும், எனவே வட்டாட்சியரிடம் தடையின்மை சான்றிதழ் கோரப்பட்டதாகவும், அதற்கு அவர்கள் நேரில் ஆய்வு செய்து அரசு வழக்கறிஞர் கருத்துறை கேட்டு தடையின்மை சான்றிதழ் அளித்துள்ளனர் என்றும் அதில் அவர்கள் தெளிவாகவும் தான் பங்குதாரர் மற்றும் குத்தகைதாரர் எனவும் தெரிவித்துள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 மேலும் இந்த உத்தரவு சட்டபூர்வமாகவும், முறையாகவும் கோரியதின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதாகவும், இதுபற்றி மற்ற பங்குதாரர்கள் எவ்வித ஆட்சேபனையும் மற்றும் TNEB அலுவலகத்திற்கு எந்த ஆட்சேபனை கடிதமும் அனுப்பப்படவில்லை என்றும், எனவே தகுந்த INDEMINITY BOND கொடுத்துள்ளதாகவும், மேலும் பதியப்பட்ட குத்தகை உத்தரவில் ரூ.13,00,000/– வரை செலவு செய்ததாக குறிப்பிட்டுள்ள பதிவு செய்யப்பட்ட உத்தரவாகும் என்றும் இதில் 2 ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் 200 தென்னை மரங்கள் பயிரிட்டு விவசாயம் செய்து வருவதாகவும், இது பற்றி அனைத்து ஆவணங்களும் அடங்கலில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 மேலும் இந்த சொத்தை பொருத்தவரை மேலே குறிப்பிட்ட ஆவணங்கள் அனைத்தும் கோவை சார்பு நீதிமன்றத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், மேலும் நாளை பங்குதாரர்கள் பாகம் பிரித்தபின் மின்சாரத்தை எந்த நிபந்தனையுமின்றி இந்த மின்சாரத்தை பயன்படுத்திக்கொள்ளலாம் என்றும், மேலும் INDEMINITY BOND மின்வாரியத்தில் கொடுத்து மின் இணைப்பு பெறும்பட்சத்தில் இதில் எந்தஒரு நஷ்டம்

ஏற்பட்டாலும் தன் சொந்த செலவில் முன்னின்று சரிசெய்து கொடுப்பதாக உறுதிமொழியும் இந்த விண்ணப்பத்தின் மூலம் தெரிவித்துக்கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

5.9 மேலும் 2019–2020–ல் வந்த மின் இணைப்பு கடிதம் கடந்த 4 வருடங்களாக விசாரணையின் அடிப்படையில் காலதாமதத்தால் காலாவதியாகும் கெடுவும் வந்திருப்பதால், மேலும் காலஅவகாசம் நீட்டித்து உத்தரவு பிறப்பிக்குமாறும், எனவே 2009–இல் பதியப்பட்டு தனது தந்தை பெயரில் வந்துள்ள EEL/220/2009–10 13.07.09 கொண்டுள்ள இலவச மின் இணைப்பை தனது பெயரில் மாற்றம் செய்து மின் இணைப்பு உத்தரவு வழங்குமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

5.10 செயற்பொறியாளர் அவர்கள் அளித்த பதில் தலைவர், நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் உடுமலை அவர்கள் அளித்த அதே பதில் திருப்பி கொடுக்கப்பட்டதாகவும், இதில் இணக்கமான முடிவு தீர்வு எட்டாத பதில் கிடைக்கப்பெற்றதாகவும், இதில் மற்ற பங்குதாரர்களிடம் NOC கையொப்பம் வேண்டும் என்று கூறப்பட்டதாகவும், மற்றவர்கள் கையொப்பம் இட மறுத்த காரணங்களை ஏற்கனவே செயற்பொறியாளர் மற்றும் குறைதீர்க்கும் மன்ற தலைவர் மற்றும் மின்குறைதீர்ப்பாளர் சென்னை அவர்களுக்கு ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் காலஞ்சென்ற தந்தை S.குப்புசாமியின் மூத்த மகனும், குத்தகைதாரருமான K. நாகராஜ் த/பெ. S.குப்புசாமி என்கிற தான் கடந்த 25 வருடங்களாக தன் அனுபவத்தில் விவசாயம் செய்து வருவதாகவும், மேலும் குத்தகைதாரர் மற்றும் அனுபவத்தில் உள்ள K.நாகராஜ் த/பெ S. குப்புசாமி என்கிற தான் குப்புசாமியின் முதல் மகன் மற்றும் முதல் வாரிசு ஆவார் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.11 இது VAO மற்றும் வட்டாட்சியரால் உறுதிபடுத்தப்பட்டு TR/2/2013–1A/2015ல் தெளிவாக வாரிசு என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், இதில் வழங்கப்பட்ட வட்டாட்சியர் உத்திரவில் S. குப்புசாமி இறந்ததால் மற்ற வாரிசுகள் இந்த குத்தகை வழக்கில் எதிர்மனுவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளதாகவும், அதில் தெளிவாக வாரிசு மற்றும் பங்குதாரர் என தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், மேலும் செயற்பொறியாளர் கடிதத்தில் வருவாய்த்துறை பதிவேட்டில் 27/1 பூமியை கணினி சிட்டாவில் தனது

தந்தை பெயர் குப்புசாமி பெயர் உள்ளதாகவும், அதேபோல் அடங்கலில் குப்புசாமியின் பெயரும், குத்தகை பதிவு எண்ணும், பதிவேட்டிலும், அடங்கலிலும் பதியப்பட்டுள்ளதாகவும், மேலும் மின்சாரம் வேண்டி விண்ணப்பித்த மனு மற்றும் ஆழ்குழாய் கிணறு போன்றவை குப்புசாமியின் பெயரில் உள்ளதாகவும், அவர் இறந்த பின் அவர் முதல் வாரிசு மற்றும் அனுபவத்திலும் உள்ள K.நாகராஜ் என்கிற தான் பெயர் மாற்றம் செய்து மின் இணைப்பு தருமாறு கோருவதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.12 எனவே தான் மேற்கூறிய EEL/220/09–10 நாள் 13.07.2009 பதியப்பட்டுள்ள மின் இணைப்பு வேண்டி கோருவதாகவும் தான் க.ச.எண்.27/1ல் உள்ள பூமியில் உள்ள ஆழ்குழாய் கிணற்றுக்கு எவ்விதமான விண்ணப்பமும் பதிவு செய்யப்படவில்லை எனவும், மேலும் தமிழக அரசு வழங்கும் இலவச மின்இணைப்பு க.ச.எண்.27/1 என்ற பூமிக்கு விண்ணப்பிக்கப்பட்டதாகவும், தனது தந்தை இறந்துவிட்டபடியால் தான் முதல் வாரிசும் குத்தகை அனுபவத்திலும் உள்ள K.நாகராஜ் என்ற அவரது முதல் வாரிசு என்ற உரிமையில் மின் இணைப்பு கோருவதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.13 மேலும் உயர்திரு தலைவர், நுகர்வோர் குறைதீர்ப்பு மன்றம் மற்றும் செயற்பொறியாளர் உடுமலை உதவி மின் பொறியாளர் பூளவாடி ஆகியோர் மின்சார வாரியத்தின் TNERC என்ற உத்திரவில் மின்இணைப்பு வழங்க இடமில்லை என பதிலளித்ததாகவும், எனவே தனது பக்கம் உள்ள நியாயத்தையும், உரிமையையும் தங்களிடம் கீழ்க்காணும் முறையில் தெரிவிப்பதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

1. மேலே குறிப்பிட்டுள்ள க.ச.எண்.27/1 பூமி வாய்மொழியாகவும், உறுதிமொழியும், தனக்கு 1999ம் ஆண்டு கொடுக்கப்பட்டதாகவும், மேலும் இன்றைய தேதி வரை தனது அனுபவத்தில் விவசாயம் செய்து வருவதாகவும்,
2. 2009ல் ஆழ்குழாய் கிணறு இட்டு ரூ.500+50 = ரூபாய் 550 தனது தந்தை பெயரில் பணம் செலுத்தி பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், மேலும் அதற்குண்டான Original பச்சை கார்டு மற்றும் ரசீதுகள் தன்னிடம் உள்ளதாகவும், மேலும் EB நிர்வாகத்தில் இருந்து அனைத்து கடிதப்போக்குவரத்தும் தனக்கு அனுப்பப்பட்டதாகவும்,

3. மேலும் 27/1 தனது தந்தை குப்புசாமி பூமியில் இரண்டு ஆழ்குழாய் கிணறுகள் இட்டு 200 தென்னை மரங்கள் இட்டும் விவசாயம் செய்து வருவதாகவும், இதில் சுமார் ரூ.13,00,000/- வரை செலவு செய்து விவசாயத்தை காப்பாற்றி வருவதாகவும், சில தவிர்க்க முடியாத சூழ்நிலையில் தன் தந்தையின் அனுமதியுடன் குத்தகை பதிவு செய்து Register செய்யப்பட்டு தீர்ப்பும் பெறப்பட்டதாகவும், இதில் தனது தந்தை இறந்த பின் மற்ற வாரிசுகளையும் சேர்த்த பின் விசாரணை செய்து தீர்ப்பளித்து பூளவாடி கிராம பதிவேட்டில் பதியப்பட்டதாகவும், எனவே சிட்டாவில் பெயர் வராமல் போனதற்கு இதுவும் ஒரு காரணமாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
4. மேலும் மற்ற வாரிசுகளிடம் NOC ல் கையொப்பம் கேட்டபோது அவர்கள் தன்னை ஏமாற்றும் நோக்கத்தோடும் மற்றும் கையொப்பம் இட மறுத்துவிட்டனர் என்றும், ஏனெனில் அவர்கள் கோவையில் தனது தந்தை பெயரில் உள்ள 3 வீடுகளில் வசித்து வருகின்றனர் என்றும், எனவே இந்த இலவச மின்சார மின் இணைப்பு அவர்களுக்கு அத்தியாவசியமற்றதாக போய்விட்டதாகவும், இதுபற்றி ஏற்கனவே முன்பு கொடுத்த விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ளதாகவும்,
5. மேலும் உடுமலை வட்டாட்சியரிடம் முறையாகவும், சட்டப்படியாகவும் மேற்கூறப்பட்ட மின்இணைப்பு தெரிவிக்கப்பட்டு அவர்களிடம் மின் இணைப்பிற்கு தடையின்மை சான்றிதழ் கோரியதாகவும், மேலும் கிராம நிர்வாக அதிகாரி மற்றும் வட்டாட்சியர் ஆகியோர் க.ச.எண்.27/1 பூமியை நேரடியாக விசாரணை செய்து மற்றும் உடுமலை EB அரசு வழக்கறிஞரிடம் சட்டக்கருத்துரை கேட்டு தடையின்மை சான்றிதழ் வழங்கப்பட்டதாகவும், இதனை ஏற்கனவே தங்களுக்கு அளித்த விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும்,
6. மேலும் வருவாய்த்துறை அடங்கலில் S. குப்புசாமி (உரிமையாளர்) மற்றும் குத்தகை பதிவு எண்ணும் பதியப்பட்டுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.14 மேற்கூறிய அனைத்து ஆவணங்களும் சட்டப்படியும், நியாயமான முறையிலும் தனது உரிமையையும் வைத்து கோரப்பட்டுள்ளதாகவும், மேலும் EB நிர்வாக அதிகாரிகள்

வருவாய்த்துறை சிட்டாவில் பெயர் அல்லது VAO நிலஉடைமை சான்றிதழ் இருந்தால் மட்டுமே மின்இணைப்பு பெயர் மாற்றம் செய்து வழங்கப்படும் என்று பதிலில் தெரிவித்துள்ளதாகவும், எனவே வட்டாட்சியர் அவர்கள் அளித்த தடையின்மை சான்றிதழில் அதுபற்றி குறிப்பிட்டுள்ளதாகவும், மேலே குறிப்பிட்டுள்ள ஆவணங்களை வைத்து EEL/220/09–10 நாள் 13.07.2009 தனது பெயருக்கு பெயர் மாற்றம் செய்து மின்இணைப்பு வழங்கிடுமாறும் மேலே குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் EB சட்ட விதிமுறைகளுக்கு பொருந்தாது என்று பதில் கடிதம் மூலம் தெரிவித்துவிட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:**

**6.1** 06.07.2022 அன்று நடைபெற்ற மின் நுகர்வோர் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் திரு K.நாகராஜ் த/பெ.குப்புச்சாமி அவர்களிடமிருந்து பெறப்பட்ட மனு தொடர்பாக– திரு.S.குப்புச்சாமி அவர்கள் இறந்துவிட்ட காரணத்தினால் திரு.S.குப்புச்சாமி அவர்களின் இறப்பு சான்று, வாரிசு சான்று மற்றும் வாரிசுகளின் சம்மதக் கடிதம் அளிக்கும்பட்சத்தில் வாரிய விதிகளின் படி விவசாய மின் இணைப்பு விண்ணப்பம் பெயர் மாற்றம் செய்து வரிசை கிரம அடிப்படையில் மின்இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என திரு K.நாகராஜ் த/பெ.குப்புச்சாமி அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 16.08.2023 அன்று முதலமைச்சரின் தனிப்பிரிவிற்கு திரு.K.நாகராஜ். த/பெ.குப்புச்சாமி அவர்கள் அளித்திருந்த மனு தொடர்பாக– திரு S. குப்புச்சாமி அவர்கள் இறந்துவிட்ட காரணத்தினால் பூளவாடி கிராமம் சர்வே. எண்.27/1ன் நிலம் திரு.K.நாகராஜ் என்பவருக்கு சொந்தமானது என்பதற்குறிய தற்போதைய வருவாய் ஆவணங்கள் மற்றும் திரு.S.குப்புச்சாமி அவர்களின் இறப்பு சான்று, வாரிசு சான்று மற்றும் மற்ற வாரிசுதாரர்களின் சம்மதக் கடிதம் அளிக்கும்பட்சத்தில் வாரிய விதிகளின் படி விவசாய மின்இணைப்பு விண்ணப்பம் திரு S.குப்புச்சாமி அவர்களின் பெயரில் இருந்து திரு.K. நாகராஜ், அவர்கள் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டு தயார்நிலை பதிவு செய்யப்பட்டு மற்றும் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வரிசை கிரம அடிப்படையில் மின்இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என திரு K.நாகராஜ்

த/பெ.குப்புச்சாமி அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 செயற்பொறியாளர் உடுமலைப்பேட்டை அவர்களிடம் திரு.K.நாகராஜ், த/பெ.குப்புச்சாமி அவர்கள் அளித்திருந்த மனு தொடர்பாக– திரு. K.நாகராஜ், அவர்களின் தந்தையார் திரு.S.குப்புச்சாமி, த/பெ.சுப்பிரமணியசெட்டியார் அவர்கள் தனது விவசாய நிலம் பூளவாடி கிராமத்தில் உள்ள க.ச.எண்–27/1 ல் அமைந்துள்ள ஆழ்குழாய் கிணற்றிற்கு விவசாய மின்இணைப்பு வேண்டி EEU– 220/2009–10, நாள் 13.07.2009 அன்று பதிவு செய்திருந்ததாகவும், அந்த விண்ணப்பத்திற்கு சாதாரண வரிசையில் தயார்நிலை பதிவு செய்ய அறிவிப்புக் கடிதம் வழங்கப்பட்டதாகவும், ஆனால் திரு. குப்புசாமி த/பெ சுப்பிரமணிய செட்டியார் அவர்கள் கடந்த 31.05.2014 அன்று காலமாகிவிட்டதால் அவரது இறப்பு சான்று மற்றும் வாரிசு சான்றிதழ் அடிப்படையில் மேற்படி விவசாய நிலத்தின் தற்போதைய வருவாய்துறை ஆவணங்கள் அளிக்கப்படாததாலும் EEU–220/2009–10 நாள்–13.07.2009 விண்ணப்பம் பெயர் மாற்றம் செய்யப்படாமலும் தயார்நிலை பதிவு செய்யப்படாமலும் உள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 அதனிடையே வருவாய் கோட்டாட்சியர் உடுமலைப்பேட்டை அவர்கள் அரசு வழக்கறிஞர் உடுமலைப்பேட்டை அவர்களிடம் சட்ட கருத்துரு பெற்று அதன் அடிப்படையில் க.ச. எண்.27/1 பூளவாடி கிராமத்தில் அமைந்துள்ள நிலத்தின் குத்தகைதாரர் என்ற அடிப்படையில் திரு. K. நாகராஜ் அவர்களிடம் Indemnity Bond–யை பெற்றுக்கொண்டு மின்இணைப்பு வழங்கிட தடையின்மை சான்று அளித்ததையும் இணைத்து மேலே சொன்ன விவசாய விண்ணப்பத்தினை தனது பெயரில் மாற்றம் செய்து மின்இணைப்பு வழங்கிட மனு அளித்திருந்ததாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 மேலே கண்ட விபரங்கள் பரிசீலனை செய்து தமிழ்நாடு மின் வாரிய விதிகளின் படி கீழகண்ட விபரங்கள் சமர்ப்பிக்கப்படுகிறது.

> *"1. Amendments to the Tamil Nadu Electricity Distribution code.............. Page No–128 ன்படி SLNO(6) Proof for ownership of well / Bore well and land with SF Number (s) with extent of land village Taluk and district.*

*Owner ship certificate from village administration officer (VAO)*
*(Note calling for other documents is not necessary unless the registering authority justifies the additional document for the owner ship)*
*SLNO(7) A. Whether the application is made jointly and signed by all the oweners/legal heirs of the well.*
*B.If No whether consent letter from the Co-Owener(s)/legal heirs (s) Enclosed.*
*C.If No whether indemnity Bond enclosed."*

6.6 வட்டாட்சியர் உடுமலைப்பேட்டை அவர்கள் க.ச.எண்–27/1 பூளவாடி கிராமத்தில் அமைந்துள்ள பூமியின் குத்தகைதாரர் திரு.K.நாகராஜ் அவர்கள் பெயரில் மின்இணைப்பு வழங்கலாம் என தடையின்மை சான்று அளித்துள்ளதாகவும், ஆனால் திரு.K.நாகராஜ் க.ச.எண்–27/1 பூளவாடி கிராமம் அவர்கள் எவ்விதமான மின்இணைப்பு விண்ணப்பமும் சமர்ப்பிக்கவில்லை என்றும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 திரு.K.நாகராஜ் த/பெ.குப்புச்சாமி (வேட்) அவர்கள் பூளவாடி கிராமம் க.ச. எண்–27/1ல் உள்ள பூமியும் அதில் உள்ள ஆழ்குழாய் கிணற்றிற்கு தங்களுடைய பெயரில் உரிய வருவாய் ஆவணங்கள் பெற்று சமர்ப்பிக்காததால் மேலே சொன்ன விவசாய விண்ணப்பம் பெயர் மாற்றம் செய்யப்படாமல் உள்ளதாகவும், எனவே தாங்கள் வருவாய்துறையிடமிருந்து தற்போதைய உரிய வருவாய் ஆவணங்கள் பெற்று சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் மேற்படி விவசாய மின்இணைப்பு விண்ணப்பமானது பெயர் மாற்றம் செய்யப்பட்டு வாரிய விதிமுறைகளின் படி மின்இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என திரு K.நாகராஜ், அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 அதனிடையே திரு.K.நாகராஜ், த/பெ.குப்புச்சாமி பூளவாடி அவர்களுக்கு வருவாய் வட்டாட்சியர் உடுமலைப்பேட்டை அவர்கள் க.ச.எண்–27/1 பூளவாடி நிலத்தின் குத்தகைதாரர் என்ற அடிப்படையில் திரு.K.நாகராஜ் அவர்களிடம் Indemnity Bond–யை பெற்றுக்கொண்டு மின்இணைப்பு வழங்கிட தடையின்மை சான்று அளித்ததையும், அரசு வழக்கறிஞர் உடுமலைப்பேட்டை அவர்களிடம் சட்ட கருத்துரு பெற்றதையும் இணைத்து மேலே சொன்ன விவசாய விண்ணப்பத்தினை தனது பெயரில் பெயர் மாற்றம் செய்து மின்இணைப்பு வழங்கிட மனு அளித்திருந்ததாகவும், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் விவசாய மின்இணைப்பு பெறுவதற்கு Amendments to the

Tamil Nadu Electricity Distribution Code, (Notification No.TNERC/DC/8-27dated. 16.07.2020), (Lr.No.TNERC/Legal/1960/2020, dated 20.07.2020)-இல் வழங்கப்பட்ட விதிமுறைகளின்படி மனுதாரருக்கு மேற்படி பூமி உரிமை உள்ளதற்கான வருவாய் ஆவணங்கள் ஏதும் இல்லாத நிலையில் விவசாய மின்இணைப்பு வழங்கக்கோரும் மனுதாரரது கோரிக்கை ஏற்கத்தக்கதல்ல என்று நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் உடுமலைப்பேட்டை உத்திரவிட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.9 எனவே திரு.K.நாகராஜ், த/பெ.குப்புச்சாமி (லேட்) ஆகிய மனுதாரரின் பெயரில் மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் குறிப்பிட்டுள்ளபடி உரிய வருவாய்துறையினரின் ஆவணங்கள் சமர்ப்பிக்கும்பட்சத்தில், மனுதாரரின் விண்ணப்பத்தின் மீது தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என திரு.K.நாகராஜ், அவர்களுக்கு கடிதம் வாயிலாக தகவல் தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை அடிப்படையில் ஆராய்ந்து தீர்வு செய்யப்படுகிறது.

7.2 இவ்வழக்கின் சாராம்சம், மேல்முறையீட்டாளர் திரு நாகராஜ் தன்னுடைய தந்தை திரு குப்புசாமியின் பெயரில் பதிவான இலவச விவசாய விண்ணப்பத்தை தன்னுடைய பெயரில் அனுபவ குத்தகை வசம் உள்ள நிலமாக இருப்பதால் தன்னுடைய தந்தையால் பதிவு செய்யப்பட்ட விவசாய விண்ணப்பத்தை தான் வழங்கும் indemnity bond ஆவணங்களின் அடிப்படையில் பெயர் மாற்றம் செய்து உத்திரவிடுமாறு முறையீடு செய்துள்ளார்.

7.3 இந்நிலையில் அக்காலை 27/1-இல் ஏற்கனவே ஒரு மின் இணைப்பு உள்ளதாகவும் தெரியவருகிறது. மேலும் OS/1246/2013 அந்த விவசாய நிலத்தின் உரிமை சம்பந்தமாக வாரிசுதாரர்களிடையே நீதிமன்றத்தின் வழக்கு நிலுவையில் உள்ளது என்றும் அறியமுடிகிறது. இதில் மேல்முறையீட்டாளர் திரு நாகராஜ் அவரது பிரதிவாதிகளாக திரு குப்புசாமி, திருமதி அமுதா, திருமதி சுலோச்சனா, திரு ரவி, திரு

குமாரராஜா மற்றும் திரு விஜயகுமார் ஆகியோருக்கிடையே வழக்கு நிலுவையில் உள்ளது அறியமுடிகிறது. இவ்வழக்கில் பிரதிவாதியாக மேல்முறையீட்டாளரின் தந்தை திரு குப்புசாமி இருக்கும் நிலையில் மேல்முறையீட்டாளர் எதிர்மனுதாரராகவே உள்ளார் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. தற்சமயம் அவரது தந்தை 2014–இல் இறந்த நிலையில் தயார் நிலை 2022–இல் எதிர்மனுதாரர் கேட்ட நிலையில் பெயர் மாற்றம் செய்வதற்கான நடவடிக்கையில் திரு நாகராஜ் ஈடபடவில்லை என்பதும் தற்சமயம் தான் அனுபவித்து வரும் சொத்திற்கு குத்தகை நீட்டிப்பு செய்யப்படவில்லை என்றும் ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது.

7.4 20 வருடங்களாக தங்களது பூமியில் விவசாயம் செய்தும், சுவாதீனத்தில் இருந்து வருவதாகவும், அவருடைய தந்தை இறந்த பிறகு அந்த நிலத்தின் குத்தகைகாரர் என்ற முறையில் அவருடைய தந்தையின் பெயரில் பதியப்பட்ட இலவச விவசாய மின் இணைப்பிற்கான விண்ணப்பத்தை தன்னுடைய பெயருக்கு மாற்றி மின் இணைப்பு வழங்குமாறு வேண்டி கேட்டுக் கொண்டுள்ளார். மேல்முறையீட்டாளர் குறிப்பிடும் நிலம் சம்பந்தமாக சொத்து தகராறு ஏற்பட்டு கோவை சார்பு நீதிமன்றத்தில் OS/1246/2013 என்ற வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் இருப்பது தெரியவருகிறது.

7.5 இந்நிலையில் எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளரின் தந்தை திரு S. குப்புச்சாமி அவர்கள் தனது விவசாய நிலம் பூளவாடி கிராமத்தில் உள்ள க.ச.எண்–27/1–இல் அமைந்துள்ள ஆழ்குழாய் கிணற்றிற்கு விவசாய மின்இணைப்பு வேண்டி EEU–220/2009–10, நாள் 13.07.2009 அன்று பதிவு செய்திருந்ததாகவும், அந்த விண்ணப்பத்திற்கு சாதாரண வரிசையில் தயார்நிலை பதிவு செய்ய அறிவிப்புக் கடிதம் வழங்கப்பட்டதாகவும், ஆனால் திரு. குப்புசாமி அவர்கள் கடந்த 31.05.2014 அன்று காலமாகிவிட்ட காரணத்தினால் பூளவாடி கிராமம் சர்வே. எண்.27/1–இன் நிலம் மேல்முறையீட்டாளர் திரு.K.நாகராஜ் என்பவருக்கு சொந்தமானது என்பதற்குறிய தற்போதைய வருவாய் ஆவணங்கள் மற்றும் திரு.S.குப்புச்சாமி அவர்களின் இறப்பு சான்று, வாரிசு சான்று மற்றும் மற்ற வாரிசுதாரர்களின் சம்மதக் கடிதம் அளிக்கும்பட்சத்தில் வாரிய விதிகளின் படி விவசாய மின்இணைப்பு விண்ணப்பம் திரு S.குப்புச்சாமி அவர்களின் பெயரில் இருந்து திரு.K. நாகராஜ், அவர்கள் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டு தயார்நிலை பதிவு செய்யப்பட்டு மற்றும் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு

வரிசை கிரம அடிப்படையில் மின்இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.6 இருதரப்பினராலும், எடுத்துரைக்கப்பட்டு வாதங்களை ஆராய்ந்து பார்க்கும்பொழுது இந்த வழக்கில் கீழ்கண்டுவைகன வழக்கெழு வினாக்களாக தெரிகின்றன.

(i) விவசாய மின்இணைப்பை வழங்குவதற்கு உள்ள விதி முறைகள் என்ன?

(ii) மேல்முறையீட்டாளரின் வாதமான பயன்பாடு வேளாண்மை சம்பந்தப்பட்டது என்றால், உரிமையைப் பற்றி பொருட்படுத்தாமல், விவசாய மின் இணைப்பை வழங்க ஒழுங்குமுறை ஆணையத்தின் மின் கட்டணத்தை நிர்ணயிக்கும் ஆணையின்படி விதி உள்ளது என்பதால் குத்தகைதாருக்கு மின்இணைப்பு வழங்க வேண்டும் என்பது ஏற்புடையதா?

(iii) மேல்முறையீட்டாளரின் விவசாய மின்இணைப்பு கோரும் விண்ணப்பத்திற்கு மின் இணைப்பு வழங்க முடியுமா?

**8.0 <u>வழக்கெழு வினா ஒன்றிற்கான தீர்வு:</u>**

8.1 ஒரு புதிய விவசாய மின் இணைப்பை வழங்க வேண்டும் என்றால் பின்பற்றப்பட வேண்டிய விதி என்ன என்பதை அறிந்து கொள்ள நாம் தமிழ்நாடு மின்சார பகிர்மான விதித் தொகுப்பின் விதி 27(2) ஐ ஆராய வேண்டும். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"27 Requisitions for Supply of Energy:*
>
> *xxx xxx xxx*
>
> *(2) Supply to Agricultural category: Application for supply to agriculture category shall be in Form 2 of Appendix III. In respect of the agricultural category, this provision shall be governed by the directives issued by the Commission from time to time, on the basis of the guidance on this matter by the National Electricity Policy (as stipulated in sub section 4 under section 86 of the Act) and the policy directions in public interest given by the State Government under sub section (1) of section 108 of the Act."*

8.2 மேற்கண்ட விதியை கூர்ந்து படிக்கும் பொழுது நாம் அறிவது வேளாண்மை வகையின் மின் வழங்கலுக்கு பின்னிணைப்பு – III இல் உள்ள படிவம் 2 இல் நுகர்வோர் விண்ணப்பத்தை தரவேண்டும். வேளாண்மை வகையினத்தை பொருத்த வரையில் (சட்டத்தின் 86 ஆம் சட்ட பிரிவில் உள்ள துணைப்பிரிவு (4) இன்படி) இப்பொருள் தொடர்பாக தேசிய மின்சார கொள்கை வழிகாட்டுதலையும், சட்டத்தின் 108 இன் பிரிவிலுள்ள துணைப் பிரிவு (1) இன்படி மாநில அரசு பொது நலங் கருதி வெளியிடும் கொள்கை வெளிகாட்டுதலையும் அடிப்படையாக கொண்டு, ஒழுங்குமுறை ஆணையம் விதிக்கும் ஆணையின்படியும் இருக்க வேண்டும்.

8.3 இங்கே விண்ணப்ப படிவம் பின்னிணைப்பு IIIஇல் உள்ள படிவம் 2–ன்படி இருக்க வேண்டும் என்று மின்விதித் தொகுப்பின் விதி 27 3) இல் கூறியுள்ளதால் அந்த படிவம், கீழே தரப்பட்டுள்ளது.

"FORM–2

Application Form for Agriculture Service connection [refer clause 27(2)]

*To*
*The Designated Engineer,*
*(Address of the Designated office)*
*1. Name of the applicant with Father's Name:*
*(Passport size photo(s) of applicant (s) to be affixed)*
*2. Applicant(s) Full Postal Address(es) with PIN Code*
*for Communication :*
*3. Contact phone Number and e–mail Id ( if available) :*
*4. Horse Power of motor–pump set required :*
*5. Whether well is owned by single applicant : Yes / No**
*If No, name of co–owners with respective Father's name*
*and percentage of share in the well :*

| *Sl. No.* | *Name* | *Father's Name* | *Percentage of share in the well* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

*6. Proof for Ownership of well /bore well* and land with SF–Number(s)*
*with extent of land, village ,Taluk and District*
*Ownership Certificate from Village Administrative : Enclosed*
*Officer (VAO)*
*(Note: calling for other documents is not necessary unless the registering authority justifies the additional document for the ownership).*

*7. a. Whether the Application is made jointly and signed by all the Owners / legal heirs of the well : Yes / No**

*b. If No, Whether Consent Letter from the Co–Owner(s) / Legal heir (s) Enclosed : Yes / No**

*c. If No, whether Indemnity Bond enclosed : Yes.*

*8 a. S.F.No.of Land/ SF Nos of Land ( In case of more than one S.F. No.)*

*b. Whether land is contiguous : Yes/No*.*

*c. If No, whether NOC/ Route permit enclosed : Yes.*

*d. SF No.of well / borewell* for which service required :*

*e. Extent of Land in acres to be irrigated ( Minimum of 0.5 acres ) :*

*f. Name of Village :*

*g. Name of Taluk :*

*h. Name of District :*

*9. Whether No Objection Certificate from Government Department required : Yes/No**

*If yes, whether NOC enclosed : Yes*

*10. a. Whether there is any other well in the land : Yes / No**

*b. If yes, whether there is any service in the well : Yes / No**

*c. If Yes, Details of service connection*

*Name :*

*Service No., SF No. and Distribution :*

*Horse Power of motor–pump set :*

*Tariff :*

*Section Office :*

*11. a. Whether there is any service existing in the well for which Service Connection is now applied : Yes / No**

*b. If Yes, Details of service connection*

*Name :*

*Service No., SF No. and Distribution :*

*Horse Power of motor– pump set :*

*Tariff :*

*Section Office :*

*12.Whether any arrears is pending in any service connection owned by the applicant in any part of the State : Yes / No**

*If yes , SC. No, Tariff, Distribution and Section :*

*NOTE : Yes / No* strike out Yes or No , the term not relevant.*

*I / We certify that the details given above are true to my / our best of knowledge.*

*Date :*

*Place :* *Applicant(s) Signature*

*Name(s) in block letters*

*Enclosure :*

*1. __________ (As per Serial No.6)*
*2.__________ (As per Serial No.7, if Applicable)*
*3.__________ (As per Serial No.8, if Applicable)*
*4.___________ (As per Serial No 9, if Applicable)*
*5. Copy of applicant(s)' Identity card (issued by Central / TN State Govt.)"*

8.4 மேற்கண்ட படிவத்தை கூர்ந்து படிக்கும் பொழுது நாம் அறிவது உரிமதாரர் தேவைப்படின் கிணறு மற்றும் நிலம் அதனுடைய சர்வே எண். மற்றும் பரப்பளவு ஆகியனவை பற்றிய உரிமைதாரர் சான்றிதழ் உரிய கிராம நிர்வாக அதிகாரி(VAO)–யிடம் பெற வேண்டும் என்பது தெரிய வருகிறது. மேலும் மேற்கூறிய விண்ணப்பத்தில் குத்தகைதாரர் என்ற பெயரில் இலவச மின்சார மின் இணைப்பு பதிவு செய்ய ஏற்பாடுகள் இல்லை என்பதும் பதிவு செய்யப்படுகிறது. மேல்முறையீட்டாளர் சமர்ப்பிக்கும் வருவாய் ஆவணங்களில் கூட்டுபங்குதாரர்கள் இருக்கும் பட்சத்தில் கூட்டு பங்குதாரர்களின் சம்மத கடிதம் பெற இயலாத போது மட்டுமே Indemnity Bond–யை சமர்ப்பித்து மின் இணைப்பு கோரலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**9.0 <u>வழக்கெழுவினா இரண்டிற்கான தீர்வு:</u>**

9.1 மேல்முறையீட்டாளரின் வாதமான நிலத்தின் பயன்பாடு வேளாண்மை சம்பந்தப்பட்டது என்றால், உரிமையைப் பற்றி பொருட்படுத்தாமல், விவசாய மின் இணைப்பை வழங்க ஒழுங்குமுறை ஆணையத்தின் மின் கட்டணத்தை நிர்ணயிக்கும் ஆணையின்படி விதி உள்ளது என்பதால் குத்தகைதாருக்கு மின்இணைப்பு வழங்க வேண்டும் என்பது ஏற்புடையதா?

9.2 கடந்த 2009–இல் 2 ஆழ்குழாய் கிணறுகள் இட்டு தமிழக அரசு வழங்கும் இலவச மின்இணைப்பு க.ச.எண்.27/1 என்ற பூமிக்கு விண்ணப்ப படிவ எண்.31997–ல் பதிவு எண்.EEL/220/2009–10 நாள்: 13.07.2009 ரூ.500/– பதிவுக்கட்டணம் செலுத்தி மேல்முறையீட்டாளரின் தந்தை பெயரில் பதியப்பட்டதாகவும், அந்த விண்ணப்பத்திற்கு 09.10.2021 அன்று வரிசை எண் அடிப்படையில் TNEB பூளவாடி அலுவலகத்தில் இருந்து சாதாரண வரிசையில் தயார்நிலை பதிவு செய்ய அறிவிப்புக் கடிதம் பெறப்பட்டதாகவும் மேலமுறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

9.3 தயார்நிலை கடிதத்தில் குறிப்பிடப்பட்ட அனைத்து ஆவணங்களும் கொடுக்கப்பட்டதாகவும், மேலும் அதில் தனது தந்தை 31.05.2014 அன்று இறந்து விட்டார் என்றும் எனவே அவருடைய இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் முழுவதும் கொடுக்கப்பட்டதாகவும், கொடுக்கப்பட்ட ஆவணங்களை வைத்து அதிகாரிகள் விசாரணை செய்து குப்புசாமியின் மற்ற வாரிசுகள் தடையின்மை சான்றுகள் கையொப்பம் கேட்டதாகவும், இது பற்றி மற்ற வாரிசுகளிடம் பேசிய போது கையொப்பம் இட மறுத்துவிட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

9.4 மேற்கூறிய சொத்திற்கு குத்தகை ஆவணம் TR 2/2013 1A-1/2015 உடுமலை வட்டாட்சியர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட உத்தரவு ஆவணம் எனவும், பங்குதாரர் மற்றும் குத்தகைதாரர் என்ற முறையில் உடுமலை வட்டாட்சியர் அவர்களிடம் ஆழ் குழாய் கிணற்றுக்கு மற்ற வாரிசுகளின் தடையின்மை கையெழுத்து இடாத பட்சத்தில் வட்டாட்சியரிடம் தடையின்மை சான்றிதழ் கோரியதாகவும், அவர்களும் விசாரித்து தடையின்மை சான்றிதழ் அளித்தனர் என்றும், மேலும் இந்த உத்தரவு சட்டபூர்வமாகவும், முறையாகவும் கோரியதின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதாகவும், இதுபற்றி மற்ற பங்குதாரர்கள் எவ்வித ஆட்சேபனையும் மற்றும் TNEB அலுவலகத்திற்கு எந்த ஆட்சேபனை கடிதமும் அனுப்பப்படவில்லை என்றும், எனவே தகுந்த INDEMINITY BOND கொடுத்துள்ளதாகவும், மேலும் INDEMINITY BOND மின்வாரியத்தில் கொடுத்து மின் இணைப்பு பெறும்பட்சத்தில் இதில் எந்தஒரு நஷ்டம் ஏற்பட்டாலும் தன் சொந்த செலவில் முன்னின்று சரிசெய்து கொடுப்பதாக உறுதிமொழியும் இந்த விண்ணப்பத்தின் மூலம் தெரிவித்துக்கொள்வதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

9.5 வருவாய்த்துறை பதிவேட்டில் 27/1 பூமியை கணினி சிட்டாவில் தனது தந்தை பெயர் குப்புசாமி பெயர் உள்ளதாகவும், அதேபோல் அடங்கலில் குப்புசாமியின் பெயரும், குத்தகை பதிவு எண்ணும், பதிவேட்டிலும், அடங்கலிலும் பதியப்பட்டுள்ளதாகவும், மேலும் மின்சாரம் வேண்டி விண்ணப்பித்த மனு மற்றும் ஆழ்குழாய் கிணறு போன்றவை குப்புசாமியின் பெயரில் உள்ளதாகவும், அவர் இறந்த பின் அவர் முதல் வாரிசு மற்றும் அனுபவத்திலும் உள்ள K.நாகராஜ் என்கிற தான் பெயர் மாற்றம் செய்து மின் இணைப்பு தருமாறு கோருவதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

9.6 20 வருடங்களாக தங்களது பூமியில் விவசாயம் செய்தும், சுவாதீனத்திலும் இருந்து வருவதாகவும், அவருடைய தந்தை இறந்த பிறகு அந்த நிலத்தின் குத்தகைகாரர் என்ற முறையில் அவருடைய தந்தையின் பெயரில் பதியப்பட்ட இலவச விவசாய மின் இணைப்பிற்கான விண்ணப்பத்தை தன்னுடைய பெயருக்கு மாற்றி மின் இணைப்பு வழங்குமாறு வேண்டி கேட்டுக் கொண்டுள்ளார்.

9.7 எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளரின் தந்தை திரு S. குப்புச்சாமி அவர்கள் தனது விவசாய நிலம் பூளவாடி கிராமத்தில் உள்ள க.ச.எண்–27/1–இல் அமைந்துள்ள ஆழ்குழாய் கிணற்றிற்கு விவசாய மின்இணைப்பு வேண்டி EEU– 220/2009–10, நாள் 13.07.2009 அன்று பதிவு செய்திருந்ததாகவும், அந்த விண்ணப்பத்திற்கு சாதாரண வரிசையில் தயார்நிலை பதிவு செய்ய அறிவிப்புக் கடிதம் வழங்கப்பட்டதாகவும், ஆனால் திரு. குப்புசாமி அவர்கள் கடந்த 31.05.2014 அன்று காலமாகிவிட்ட காரணத்தினால் பூளவாடி கிராமம் சர்வே. எண்.27/1–இன் நிலம் மேல்முறையீட்டாளர் திரு.K.நாகராஜ் என்பவருக்கு சொந்தமானது என்பதற்குறிய தற்போதைய வருவாய் ஆவணங்கள் மற்றும் திரு.S.குப்புச்சாமி அவர்களின் இறப்பு சான்று, வாரிசு சான்று மற்றும் மற்ற வாரிசுதாரர்களின் சம்மதக் கடிதம் அளிக்கும்பட்சத்தில் வாரிய விதிகளின் படி விவசாய மின்இணைப்பு விண்ணப்பம் திரு S.குப்புச்சாமி அவர்களின் பெயரில் இருந்து திரு.K. நாகராஜ், அவர்கள் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டு தயார்நிலை பதிவு செய்யப்பட்டு மற்றும் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வரிசை கிரம அடிப்படையில் மின்இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

9.8 அதனிடையே திரு.K.நாகராஜ், த/பெ.குப்புச்சாமி பூளவாடி அவர்களுக்கு வருவாய் வட்டாட்சியர் உடுமலைப்பேட்டை அவர்கள் க.ச.எண்–27/1 பூளவாடி நிலத்தின் குத்தகைதாரர் என்ற அடிப்படையில் திரு.K.நாகராஜ் அவர்களிடம் Indemnity Bond–யை பெற்றுக்கொண்டு மின்இணைப்பு வழங்கிட தடையின்மை சான்று அளித்ததையும், அரசு வழக்கறிஞர் உடுமலைப்பேட்டை அவர்களிடம் சட்ட கருத்துரு பெற்றதையும் இணைத்து மேலே சொன்ன விவசாய விண்ணப்பத்தினை தனது பெயரில் பெயர் மாற்றம் செய்து மின்இணைப்பு வழங்கிட மனு அளித்திருந்ததாகவும், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் விவசாய மின்இணைப்பு பெறுவதற்கு Amendments to the

Tamil Nadu Electricity Distribution Code, (Notification No.TNERC/DC/8-27dated. 16.07.2020), (Lr. No. TNERC/ Legal/ 1960/ 2020, dated 20.07.2020)- இல் வழங்கப்பட்ட விதிமுறைகளின்படி மனுதாரருக்கு மேற்படி பூமி உரிமை உள்ளதற்கான வருவாய் ஆவணங்கள் ஏதும் இல்லாத நிலையில் விவசாய மின்இணைப்பு வழங்கக்கோரும் மனுதாரரது கோரிக்கை ஏற்கத்தக்கதல்ல என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

9.10 ஆகவே, இந்த முறையீட்டு மனுவில் மேல்முறையீட்டாளர் தான் குத்தகைதாரர் என்றும் Indemnity Bond அடிப்படையில் பெயர் மாற்றம் செய்து விண்ணப்பம் பதிவு செய்யும் கோரிக்கையில் ஏற்கனவே மின்குறைதீர்ப்பாளரால் மேல்முறையீட்டு எண் 85/2015-இன்படி குத்தகைதாரர்களுக்கு இலவச விவசாய மின் இணைப்பு வழங்க இயலாது என்று தீர்வு செய்யப்பட்டுள்ளது என்பதை இங்கு சுட்டிக்காட்டி பதிவு செய்யப்படுகிறது. மேலும் தற்சமயம் வழக்கில் உள்ள Form 2 விண்ணப்பத்தில் குத்தகைதாரர் என்ற பெயரில் இலவச மின்சார மின் இணைப்பு பதிவு செய்ய ஏற்பாடுகள் இல்லை என்பதும் பதிவு செய்யப்படுகிறது. எனவே, அனுபவ பாத்தியத்தின் அடிப்படையில் குத்தகைதாரர் என்ற முறையில் வாதிடும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கையின்படி பெயர் மாற்றம் செய்வதற்கு ஏற்புடையதல்ல என்று பதிவு செய்யப்படுகிறது.

9.11 இந்நிலையில் ஏற்கனவே மேல்முறையீட்டு எண் 93/2015-இல் தீர்வு வழங்கிய மேல்முறையீட்டு மனுவின் முறையீடு கீழே கொடுக்கப்படுகிறது.

*"மேல்முறையீட்டாளர் அவரின் விவசாய மின்இணைப்பு கோரும் விண்ணப்பத்தை கூட்டு உரிமையாளரின் கையொப்பம்/சம்மத கடிதம் இல்லாமல் பிணை முறிவு பத்திரம் பெற்றுக் கொண்டுபதிவு செய்ய தக்க ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று கோரியுள்ளார்."*

*எதிர்மனுதாரர், மின்பகிர்மான விதித்தொகுப்பின் விதி 27(2)ன் படி விவசாய மின் இணைப்பு கோரும் கிணறு உள்ள சர்வே எண், கூட்டு உரிமையாக இருப்பின் கூட்டு பங்குதாரரரின் சம்மத கடிதம் பெற இயலாத போது பிணைமுறிவு பத்திரம் பெற்றுக்கொண்டு விண்ணப்பத்தை பதிவு செய்ய விதிகளின்படி முடியாது என்று வாதிட்டுள்ளார்.*

*எனவே, இந்நிலையில் ஏற்கனவே இவ்வழக்கில் மேலும், மாண்புமிகு மதராஸ் உயர்நீதிமன்றம், W.P. No.22941 of 2010றகாக 17.7.2013ல் வழங்கிய தீர்ப்பில் மின்சார பகிர்மான விதி 27(2)ன் படி விவசாய மின்இணைப்புகள் மற்ற கூட்டு உரிமையாளர்களின் மறுப்பின்மை சான்று பெறாமல் வழங்க முடியாது என்று ஆணையிட்டுள்ளது என்பதையும் சுட்டிகாட்டி வாதிட்டுள்ளார்.*

*மேலும், இயக்குனர்(பகிர்மானம்) அவர்களின் 1.2.2016 நாளிட்ட கடிதத்தின்படி விவசாய மின்இணைப்பு விண்ணப்பம் பெறும்பொழுது மின்சார பகிர்மான விதித்தொகுப்பின் பிரிவு 27(2)ன் படி படிவம்–2ல் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு அனைத்து கூட்டு உரிமையாளர்களின் ஒப்பம், அல்லது சம்மதக் கடிதம் பெறவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் வாதிட்டுள்ளார். மேலும், இது சம்பந்தமாக மேற்கண்ட கடிதத்தில் மதராஸ் உயர்நீதிமன்றம் W.A. No. 261 of 2015 & M.P. No. 1 of 2015 ல் வழங்கியுள்ள தீர்வும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என்றும் வாதிட்டுள்ளார்.*

*இந்த மேல்முறையீட்டாளர் கூட்டு உரிமையாளர்களின் சம்மதக் கடிதம் இல்லாநிலையில் பிணைமுறிவு பத்திரம் பெற்றுக் கொள்ளலாம் என்று சுட்டிக்காட்டியுள்ள வாரியத்தின் ஆணைகள், ஒழுங்குமுறை ஆணையத்தின் மின்சாரப் பகிர்மான விதித்தொகுப்பு அமலுக்கு வருவதற்கு முன்பாக வாரியத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் ஆகும். மின்சார பகிர்மான விதித்தொகுப்பு 1.9.2004 அன்று அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. எனவே, 1.9.2004லிருந்து ஒழுங்குமுறை ஆணையம் விதித்துள்ள விதிகள்தான் உரிமம்தாரரை கட்டுப்படுத்தும். அந்த விதிகளுக்கு புறம்பாக உள்ள வாரிய ஆணைகள் செல்லத்தக்கது அல்ல. எனவே, உரிமம்தாரரின் ஆணைகளில் பிணைமுறிவு பத்திரம் பெற்றுக்கொண்டு கூட்டு உரிமையாளர்களின் சம்மதக் கடிதம் இல்லாத நிலையில் விவசாய மின்இணைப்பு வழங்கலாம் என்று உள்ளதால் தன்னுடைய விவசாய விண்ணப்பத்தையும் பதிவு செய்யவேண்டும் என்ற மேல்முறையீட்டாளரின் வாதம் ஏற்புடையது அல்ல என்று தீர்வு செய்கிறேன்.*

*எதிர்மனுதாரர் மின்சார பகிர்மான விதி 27(2) ன்படி விவசாய மின் இணைப்பு பெறுவது சம்பந்தமாக மதராஸ் நீதிமன்றம் W.P. No. .22941 of 2010 அளித்த ஆணையையும் மற்றும் மேல் முறையீட்டில் மதராஸ் நீதிமன்றம் W.A. No. 261 of 2015 & M.P. No. 1 of 2015 ல் அளித்த ஆணையையும் குறிப்பிட்டு வாதிட்டுள்ளார். இது சம்பந்தமாக மதராஸ் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட ஆணையின் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.*

> *"W.P.No.22941 of 2010 :*
>
> *******
>
> *10. From the reading of Regulation 27(2) of the Tamil Nadu Electricity Distribution Code, 2004, it is clear that the agricultural electricity service connection cannot be granted without a 'No Objection' certificate being obtained from the co–sharers of the well in question. ******
>
> *11. It is not in dispute that the petitioner had not fulfilled the necessary conditions, as stipulated under Regulation 27(2) of the Tamil Nadu Electricity Distribution Code, 2004, in such circumstances, the writ petition filed by the petitioner is devoid of merits and therefore, it is liable to be dismissed. However, it is made clear that if the petitioner is able to get the consent of the co–sharers in the well in question, it would be open to him to approach the authorities concerned, for the grant of agricultural electricity connection, as prayed for by him. No costs. Connected M.P.No.1 of 2010 is closed."*

*மேற்கண்ட நீதிமன்ற ஆணையை கூர்ந்து படிக்கும் பொழுது நாம் அறிவது மின்சார பகிர்மான விதி 27(2) ன்படி கிணற்றின் பங்குதாரர்களிடம் தடையில்லா சான்று பெறாமல் விவசாய மின் இணைப்பு வழங்க இயலாது என்றும், ஆனால் கிணற்றின் பங்குதாரர்கள் சம்மதக் கடிதம் அளிக்கும் பட்சத்தில் மனுதாரர் சம்பந்தப்பட்ட அதிகாரியை விவசாய மின் இணைப்பு வேண்டி அணுகலாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

*"W.A.No.261 of 2015 and M.P.No.1 of 2015*
*(இது W.P. 22941 of 2010ன் தீர்வின் மீது தொடரப்பட்ட மேல்முறையீடு ஆகும்)*
*******

*8. It is beneficial to refer and extract the relevant provisions of Clause 27(2) and (4) of the Code 2004.*

*"(2) Supply to Agricltural category : Application for supply to agriculture category shall be in Form 2 of Annexure III. In respect of the agricultuural category, this provision shall be governed by the directives issued by the Commission from time to time, on the basis of the guidance on this matter by the National Electricity Policy (as stiuplated in sub section 4 under secetion 86 of the Act) and the policy directions in public interest given by the State Government under sub section (1) of section 108 of the Act.*

*xxxx xxxxx xxxx*

*(4) An intending consumer who is not the owner of the premises shall prodcue a consent letter in Form 5 of Annexure-III to this code from the owner of the premises for availing the supply, if the owner is not available or refuses to give consent letter, the intending consumer shall produce proof of his/her being in lawful occupation of the premises and also execute an indemnity bond in Form-6 of the Annexure-III to this code indemnifying the licensee against any loss on account of disputes arising out of effecting service connection to the occupant and acceptance to pay security deposit twice the normal rate".*

*9. On perusal of the relevant provisions, it appears that Clause 27(4) of the Code 2004 is intended to provide supply of electricity to the occupant of the premises, who is unable to obtain consent letter from the owner of the premises either on account of non availability or refusal to give consent letter, on production of proof of occupancy, execution of indemnity bond in Form 6 of the Annexure III and also payment of security deposit twice the normal rate.*

*10. There is no dispute that in the instant case, the property in question is a Well owned by the co-sharers/co-owners. The appellant is one of the sharers / owners of the Well. The well cannot be held from any point of view as premises for the purpose of taking the benefit under the provisions of Clause 27(4) of the Code 2004. The reliance of the petitioner in A.Muthusamy case (supra) is misplaced as the facts in that case was that the intended consumer therein was seeking electricity service connection to the residential house, which was acquired by the Government for the purpose of the housing scheme.*

*11. Clause 27(4) of the Code 2004 contemplates requirement of production of consent letter in Form 5. Form 5 is annexed in Annexure III to the Code. Clause 27(4) refers to a premises whereunder the tenant is an occupant and in the event of refusal to give consent by the owner, a deed of indemnity bond in Form 6 of the Annexure III to the Code shall be executed which also refers to the premises taken on lease by the intending consumer. Form 2 of Annexure III to the Code is the proper form for making an application for agriculture service connection. But, in the case of agriculture service connection, there is no provision for availability of Clause 27(4) of the Code. Sub clause (2) of Clause 27 deals with the supply to agricultural category. Sub clause (3) of Clause 27 deals with application for HT*

*supply and sub clause (4) of Clause 27 deals with the supply of electricity connection to the tenant or lessee in the premises owned by other persons.*

*12. Examining from the all angles, as aforestated, we are of the considered view that the provisions of Clause 27(4) of the Code 2004 shall not be available and applicable in case of agriculture service connection as in the case on hand.*

****** "*

*மேற்கண்ட நீதிமன்ற ஆணையை கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது, 2004-ம் ஆண்டின் விதித்தொகுப்பின் விதி 27(4) ஆனது எவ்விதமான நிலையிலும் விவசாய மின்இணைப்பிற்கு பொருந்தாத ஒன்று என்று மதராஸ் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது."*

9.12 இந்நிலையில் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் தற்சமயம் நடைமுறையில் உள்ள தமிழ்நாடு மின்சாரப் பகிர்மான விதித் தொகுப்புகளில் வருவாய் ஆவணங்களில் கூட்டுபங்குதாரர்கள் இருக்கும் பட்சத்தில் கூட்டு பங்குதாரர்களின் சம்மத கடிதம் பெற இயலாத போது மட்டுமே Indemnity Bond–ஐ சமர்ப்பித்து மின் இணைப்பு கோரலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் மனுதாரரின் பெயரில் விவசாய நிலத்திற்கு உரிமை இருப்பதற்கான வருவாய் ஆவணங்கள் இல்லாத நிலையில் வாரிசுதாரராக இருந்தாலும் Indemnity Bond இணைத்து பெயர் மாற்றம் செய்து இலவச மின்சாரத்தை பதிவு செய்யும் கோரிக்கைக்கு இடமில்லை என்பது தெரியவருகிறது. ஆகவே மேல்முறையீட்டாளர் வாரிசுதாரர் என்ற அடிப்படையில் மேற்கூறிய ஆணையின் அடிப்படையில் Indemnity Bond சமர்ப்பித்து விவசாய மின் இணைப்பை பெயர் மாற்றம் செய்து பதிவு செய்யும் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது.

**10.0 <u>வழக்கெழு வினாடமூன்றிற்கான தீர்வு</u>:**

10.1 மேற்கண்ட பத்திகளின் அடிப்படையில் மேல்முறையீட்டாளர் பெயர் மாற்றம் செய்து இலவச மின்சார பதிவு செய்யும் கோரிக்கையில் அவர் குத்தகைதாரர் என்ற அடிப்படையிலும் Indemnity Bond –இன் அடிப்படையில் வாய்ப்பில்லை என்று தீர்வு செய்யப்படும் நிலையிலும் மேலும் வாரிசுதாரர் என்ற அடிப்படையில் Indemnity Bond சமர்ப்பித்தாலும் அது தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய விதிக்குள் வராது என்பதாலும் அவர் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது. மேல்முறையீட்டாளர் சமர்ப்பித்த ஆவணங்களில் அவர் கூட்டு பங்குதாரர் என்ற எந்த ஆவணங்களும் சமர்ப்பிக்கவில்லை. ஆகவே, Indemnity Bond–இன் அடிப்படையில் இலவச விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணப்பத்தை பெயர் மாற்றம் செய்து பதிவு செய்ய இயலாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

11.0 <u>முடிவுரை</u>:

11.1 மேற்படி பூமிக்கு மேல்முறையீட்டாளருக்கு உரிமை உள்ளதற்கான வருவாய் ஆவணங்கள் ஏதும் இல்லாத நிலையில், வருவாய் துறையிடமிருந்து வாரிசு மற்றும் உரிமைக்கான உரிய வருவாய் ஆவணங்களை வாரிய விதிமுறைகளுக்கு உட்பட்ட காலகெடுவிற்குள் அளிக்கும்பட்சத்தில் விவசாய விண்ணப்பம் பெயர் மாற்றம் செய்து மின் இணைப்பு வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தீர்வு செய்யப்படுகிறது.

11.2 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண் 52/2024 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
**மின்குறைதீர்ப்பாளர்**

''நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை''
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

1. திரு K. நாகராஜ், - By RPAD
த/பெ. S. குப்புசாமி,
பஸ் ஸ்டாப் கிழபுறம், 5/129 B, அண்ணா நகர்,
தோட்டத்து சாளை, பூளவாடி – 642 206,
உடுமலை வட்டம், திருப்பூர் மாவட்டம்.

2. செயற்பொறியாளர்/ இ&ப/ உடுமலை,
உடுமலை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
திருப்பூர் ரோடு, எரிப்பாளையம் அஞ்சல்,
உடுமலை – 642 126.

3. உதவி மின்பொறியாளர்/ இ&ப/ பூளவாடி,
உடுமலை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
அத்துகிணத்துப்பட்டி ரோடு, பூளவாடி,
மாடத்துக்குளம் தாலுக்கா – 642 206.

4. மேற்பார்வை பொறியாளர், – By Email
**உடுமலை** மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
திருப்பூர் ரோடு, உடுமலை – 642 126.

5. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

6. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

7. உதவி இயக்குநர் (கணினி) – <u>தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.